10. அரசினர் தனித்தீர்மானம்

நிலங்கள், கட்டிடங்கள் ஆகியவற்றில் நியாயமான ஆண்டு மதிப்பை நிர்ணயிப்பதற்காக நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு வழிகாட்டிக் குறிப்புகள் வரையறுக்க அதிகாரமளிக்கும் விதியைச் சேர்த்தல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தனித்தீர்மானம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1920–ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 305-A ஆம் பிரிவையொட்டி, மேற்சொன்ன சட்டத்தின் IV- ஆம் விவர அட்டவணையில் உள்ள "வரி விதிப்பும் நிதி விதிகளும்" என்ற தலைப்பின்கீழ் "பாகம் I-வரி வதிப்பு விதிகளில்" 6–ஆம் விதிக்குப் பின்னர் கீழ்க்காணும் விதியைச் சேர்க்க சட்டப் பேரவை தீர்மானம் இயற்ற வேண்டும் :

> '6A-நிலங்கள், கட்டிடங்கள் ஆகியவற்றின் நியாயமான ஆண்டு மதிப்பை நிர்ணயிப்பதற்காக நகராட்சி நிர்வாக இயக்குநர் அவ்வப்போது பொருத்தமான வழிகாட்டிக் குறிப்புகளை வரையறுக்கலாம்,"

என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தனித்தீர்மானம் நிறைவேறியது.